# செய்தி வெளியீடு

## இலங்கையின் பொருளாதாரம் 2018 முதலாம் காலாண்டில் 3.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது

### தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2018 முதலாம் காலாண்டு

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

இலங்கையின், 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும், அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 3.2 சதவீதமென தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. நிலையான (2010) விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2018 முதலாம் காலாண்டில் ரூபா 2,223,856 மில்லியன்களாக பதிவு செய்ததுடன் , 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ரூபா 2,154,971 மில்லியன்களாக பதிவு செய்தது.

2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான, பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.0 சதவீதம், 30.4 சதவீதம், 53.6 சதவீதம் மற்றும் 8.9 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவான மறை வளர்ச்சி வீதமான 4.4 சதவீதத்துடன் ஒப்பிடும் போது விவசாய நடவடிக்கைகள், இக் காலாண்டுப் பகுதியில் 4.8 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்தியுள்ளது. விவசாய துறை முக்கியமாக சாதகமல்லாத காலநிலை நிலைமை காரணமாக தொடர்ச்சியாக கடந்த சில காலாண்டுகளாக மறை வளர்ச்சி வீதத்தையே காட்டியது, ஆனால் 2017 நான்காம் காலாண்டிலிருந்து நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ய தொடங்கியதுடன், மீள்நிலமையையும் அடைந்துள்ளது. இக் காலப்பகுதியில், கைத்தொழில் நடவடிக்கைகள் 1.0 சதவீத சிறிய விரிவாக்கத்தையே நிறைவேற்றியுள்ளது. சேவைகள் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு 4.4 சதவீதத்தால் மேலும் விரிவாக்கம் அடைந்துள்ளது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், 'அரிசியின் வளர்ச்சி' 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவான 49.6 சதவீத சுருக்கத்தை உள்ளடக்கி 56.6 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்தியுள்ளது. 'தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக)', 'காய்கறிகளின் வளர்ச்சி', 'தேயிலை வளர்ச்சி', 'பழவகைகளின் வளர்ச்சி', 'கால்நடை உற்பத்தி ', 'காடாக்கலும் குத்திகளும்' மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பன மிக உயர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது: அவை முறையே 40.2 சதவீத, 22.3 சதவீத, 10.6 சதவீத, 6.0 சதவீத, 5.4 சதவீத, 3.2 சதவீத மற்றும் 37.4 சதவீதங்களாகும். இக்காலப் பகுதியில் 'எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக ' கடந்த வருடத்தில் தென்னை உற்பத்திப் பிரதேசங்களில் ஏற்பட்ட தொடர் வரட்சி காரணமாக

13.5 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இக் காலாண்டில் 'இறப்பர் வளர்ச்சி' மற்றும் 'கடல் மீன்பிடி' என்பன முறையே 13.9 சதவீத, 2.0 சதவீத வீழ்ச்சி வீதத்தை மேலும் எதிர்கொள்கிறது.

2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கையும் 1.0 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. இக் காலப்பகுதியில் தயாரிப்புத்துறை மட்டும் 2.8 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. இதற்கு, உப பிரிவுகளான, ' உணவு, பானம், மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு', 'புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு', 'மரம் மற்றும் மர உற்பத்திகளின் தயாரிப்பு', 'இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு', 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் தயாரிப்பு', 'அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்' என்பவற்றின் வளர்ச்சியே பாரிய பங்களிப்பாகும். இந்த நடவடிக்கைகள் முறையே 5.2 சதவீத 4.7 சதவீத 11.9 சதவீத 6.1 சதவீத 7.9 சதவீத மற்றும் 9.1 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்கின்றன. எவ்வாறாயினும் 'கட்டடவாக்கம்' *நடவடிக்கை* 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது 4.9 சதவீதத்தால் சுருங்கியுள்ளது. உப பிரிவான 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடு' 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவு செய்த 0.9 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 10.2 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்கிறது.

'2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சேவைத் துறையின் நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பான 53.6 சதவீதத்தை வழங்குவதுடன், 4.4 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்', 'தங்குமிடம் மற்றும் உணவுப் பணிச் செயற்பாடுகள் ', 'தொடர்பாடல்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', மற்றும் 'வீடுகளின் உடமை உள்ளிட்ட உண்மைச் சொத்துக்களின் செயற்பாடுகள்', 'தொழில்சார் பணிகள்', மற்றும் 'ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்' காரணமாகும். இந் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 5.4 சதவீத, 7.6 சதவீத, 11.1 சதவீத, 12.2 சதவீத, 4.9 சதவீத, 3.9 சதவீத மற்றும் 5.0 சதவீதங்களை காட்டுகின்றன. 'பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு ' மற்றும் 'கல்விச் செயற்பாடுகள்' முறையே 0.4 சதவீத, 1.7 சதவீதத்தால் சுருங்கியுள்ளதாக பதிவு செய்யப்படுகிறது.

காலாண்டு தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் தரவுகள் வழங்குபவர்களால் வழங்கப்படும் தற்காலிகமான மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டே கணிப்பிடப்படுகிறது. உண்மையான தரவுகள் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டுக்கான மூன்றாம், நான்காம் காலாண்டுகள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வீதங்கள் முறையே 3.2 சதவீத, 3.5 சதவீத, 3.3 சதவீதங்களாக திருத்தப்பட்டுள்ளன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2018 ஆம் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**